நகர்மன்றம்,
போடிநாயக்கனூர் ,நாள்.11.04.2022

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11.04.2022ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **பொருள் எண்–1 :**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின்

மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் போடிநாயக்கனூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி **(Current Liabilities)** (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | – |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | Water Supply Scheme Municipal Contribution - 11.12 கோடி |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | Water Supply Loan - 12.00 கோடி |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | P.H out sourcing - 0.62<br>Rtd.Staff - 0.65<br>Diesal -0.15<br>------<br>1.42 cr |
| | **மொத்தம்** | **24.54 கோடி** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், போடிநாயக்கனூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மண்டலங்கள் வாரியாக சொத்துவரி சீராய்வு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>குடியிருப்பு</u>

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | கட்டிடத்தின் சதுரஅடி 600வரை | கட்டிடத்தின் சதுரஅடி 601 முதல் 1200 வரை | கட்டிடத்தின் சதுரஅடி 1201 முதல் 1800 வரை | கட்டிடத்தின் சதுரஅடி1800 மேல் |
|---|---|---|---|---|---|
| A | 0.65 | 0.82 | 0.98 | 1.14 | 1.30 |
| B | 0.45 | 0.57 | 0.68 | 0.79 | 0.90 |
| C | 0.25 | 0.32 | 0.38 | 0.44 | 0.50 |

<u>வணிகம்</u>

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
|---|---|---|
| A | 1.95 | 3.90 |
| B | 1.35 | 2.70 |
| C | 0.75 | 1.50 |

**சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்**

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
|---|---|---|
| A | **0.98** | **1.72** |
| B | **0.68** | **1.19** |
| C | **0.38** | **0.67** |

**தொழிற்சாலை**

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது தொழிற்சாலை பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
|---|---|---|
| A | 1.30 | 2.28 |
| B | 0.90 | 1.58 |
| C | 0.50 | 0.88 |

**காலிமனைவரி**

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
|---|---|---|
| A-குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ள தெருக்கள் பகுதி | 0.17 | 0.34 |
| B-முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 0.21 | 0.42 |
| C-முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 0.37 | 0.74 |

**அலுவலககுறிப்பு :–**

சொத்துவரி காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் , சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் போடிநாயக்கனுார் நகராட்சியில் தற்போதுள்ள 24.54 கோடி கடன்தொகை / நிதித்தேவையாக உள்ளது.மேலும் விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதியஉயர்வு பொதுமக்களுக்கு செய்யவேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிக்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் , நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும் மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறு பொது சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**தீர்மான எண் : 16–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்– 2:**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவு வாகனம் டம்பர் பிளேசர் TN60 V-0533 என்ற எண்ணுள்ள வாகனத்தை பழுதுகள் காரணமாக பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தாமல் 2 வருடத்திற்கு மேலாக நகராட்சி அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நகராட்சியில் வணிக நிறுவனங்களில் உருவாகும் குப்பை கழிவுகளை அகற்றுவதற்கும் நகரில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது உருவாகும் கட்டிட கழிவுகளை அகற்றுவதற்கும் மற்றும் தெருக்களில் சாக்கடை மண் அகற்றுவதற்கும் புயல் மழை காலங்களில் உருவாகும் இதர குப்பைக்கழிவுகளை அகற்றுவதற்கும் நகராட்சியில் லாரி வாகனம் ஏதும் இல்லை. புதிதாக லாரி வாங்கி பயன்படுத்துவதற்கு நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லை.

எனவே மேற்கண்ட டம்பர் பிளேசர் TN60 V-0533 வாகனத்தை OPEN TIPPER LORRY ஆக மாற்றம் செய்து மேற்கண்ட பணிகளுக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி பயன்படுத்தலாம். மேற்கண்ட வாகனத்திற்கு RDO அலுவலகத்தில் வரி மற்றும் காப்பீடு தொகையை செலுத்தி புதுப்புத்தல் (FC) எடுத்து பயன்பாட்டிற்கு கொண்டுவரலாம். உத்தேச செலவினம் ரூ 7,00,000/. ஆகும். அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.0668/2022/எச்2)**

**தீர்மான எண் : 17–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ <u>பொருள் எண்– 3:</u>

போடிநாயக்கனூர் நகராட்சி சாலை காளியம்மன் கோவில் அருகில் உள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் உப உந்து நிலைய Sub Pumbing Station ல் 50HP மின்திறன் கொண்ட மோட்டார் Panel Board பழுதாகி உள்ளதால் அதை சரிசெய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/–நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்– 0770/2022/இ1)

**தீர்மான எண் :** 18– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ <u>பொருள் எண்– 4:</u>

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்–249/2022/தி6,நாள்–24.02.2022–ன் படி போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ் , கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிவிபரம்** | **தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பரமசிவன் கோயில் செல்லும் சாலையில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பாலம் அமைத்தல் | ரூ.20.00/– |

அதன் படி மேற்காணும் பணிக்கு 29.03.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு. L..எல்லப்பன்,ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர்.
2. திரு. P.நடராஜன்,ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியலை 29.03.2022ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பரமசிவன் கோயில் செல்லும் சாலையில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பாலம் அமைத்தல் | ரூ.20,00,000/– | திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 4.84% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 4.92% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர். ஒப்பந்ததாரரின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு 31.03.2022ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், மின்சாதன பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 4.84% வழங்கியுள்ள திரு. L..எல்லப்பன், போடிநாயக்கனூர். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்தும் மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 0767/2022/இ1)**
**தீர்மான எண் : 19–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்– 5:**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்–249/2022/தி6,நாள்–24.02.2022–ன் படி, போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ் , கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிவிபரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்18–ல், நாடார் பள்ளி அருகில் புதிய கழிப்பிடம் கட்டுதல் | ரூ.15.00/– |

அதன் படி மேற்காணும் பணிக்கு 29.03.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு. L..எல்லப்பன்,ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர்.
2. திரு. P.நடராஜன்,ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியலை 29.03.2022ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்18–ல், நாடார் பள்ளி அருகில் புதிய கழிப்பிடம் கட்டுதல் | ரூ.15,00,000/– | திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 4.80% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 5.11% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர். ஒப்பந்ததாரரின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு 31.03.2022ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், மின்சாதன பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 4.80% வழங்கியுள்ள திரு. L..எல்லப்பன், போடிநாயக்கனூர். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்தும் மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 0768 /2022/இ1)

**தீர்மான எண் : 20–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்– 6:**

போடிநாயக்கனூர் நகராட்சியில் NUHM-திட்டம் 2020–21ன் கீழ் , கீழ்காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிவிபரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி தென்றல் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 15,00,000/– |

அதன் படி மேற்காணும் பணிக்கு 29.03.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு. L..எல்லப்பன்,ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர்.
2. திரு. P.நடராஜன்,ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியலை 29.03.2022ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி தென்றல் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | ரூ.15,00,000/– | திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 4.87% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 5.33% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் ,போடிநாயக்கனூர். ஒப்பந்ததாரரின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு 31.03.2022ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், மின்சாதன பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 4.87% வழங்கியுள்ள திரு. L..எல்லப்பன், போடிநாயக்கனூர். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்தும் மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 0442/2022/இ1)
**தீர்மான எண் : 21–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 7:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.1725/2022/எம்.3, நாள்.24.02.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலகத்தின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.1723/2022/பி1 ,நாள்.01.04.2022–ல் முதல் நிலை நகராட்சிக்கு 3 எண்ணம் ஈப்பு வாகனம் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் தற்போது உள்ள வாகனங்கள் தவிர்த்து கூடுதலாக தேவைப்படும் புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு கருத்துரு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதல் நிலை நகராட்சியான போடிநாயக்கனூர் நகராட்சியில் தற்போது 2 எண்ணம் ஈப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால் ,கூடுதலாக ஒரு புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.55/– இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் ,புதிய ஈப்பு வாகனம் வாங்கும் பணிக்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்– 0755/2022/இ1)

**தீர்மான எண் :** 22– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 8:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி (Capital Grant Fund) 2021–2022–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், வார்டு எண்.2, மயானகரை ரஸ்தாவில் அமைந்துள்ள 12.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்கானிப்பு அமைப்பு (Online Continious Effluent Monotring System) நிறுவும் பணியினை ரூ,46.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்.17021–2 /2021/EA-1, நாள்.14.12.2021 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.0769/2021/இ1)

**தீர்மான எண் :** 23– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 9:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ் , கீழ்காணும் பணிக்கு 18.03.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பதபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் நகர்மன்ற கூடம் மராமத்து பணி மேற்கொள்வது | ரூ.6,00,000/– | திரு. L..எல்லபப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | (-)0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 6.69% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலககுறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **(–)0.03%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.L.எல்லப்பன், போடிநாயக்கனூர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 0198/2022/இ1)**

**தீர்மான எண் :** 24– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–10:</u>**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் **30.03.2022** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.**40032/2012**/ஆர்**1**, நாள்.**01.04.2022**ன்படி, 01.04.2022 முதல் பொதுச்சொத்துவரி சீராய்வு செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்பேரில் தொடர் நடவடிக்கையாக தேனி மாவட்ட செய்தி மக்கள்தொடர்பு துறையின் வாயிலாக விளம்பரம் வெளியிடவும், அரசு நாளிதழில் அறிவிப்பு வெளியிடவும், இதற்கான 20816 வரிவிதிப்புகளுக்கான சுயமதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கீட்டுத்தாள்கள் அரசுஅங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சிட்டு பெறுவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.250000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 786 /2022/அ1)**

**தீர்மான எண் : 25–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி